**பன்னாட்டு நாணய நிதியம் இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் நான்காவது மீளாய்வு தொடர்பில் அலுவலர்-மட்டத்திலான உடன்படிக்கையை அடைந்துள்ளது**

2018 ஏப்பிறல் 20

| |
|---|
| இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களின் கருத்துக்களேயன்றி அது பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் கருத்தினைப் பிரதிபலிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இத் தூதுக் குழு ஆரம்பத்தில் கண்டறியப்பட்ட விடயங்களின் அடிப்படையில், அலுவலர்கள் அறிக்கையினைத் தயாரிப்பர். இது முகாமைத்துவத்தின் ஒப்புதலுக்குட்பட்டு, கலந்துரையாடல்களுக்கும் தீர்மானங்களுக்குமாக பன்னாட்டு நாணய நிதிய நிறைவேற்றுச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படும். |

- மேலதிகமான அரசிறைத் திரட்டல் என்பது படுகடனை குறைக்கும் அதே வேளையில் சமூகச் செலவினத்திற்கான இடைவெளியை உருவாக்கலாம். இறை இடர்நேர்வுகளை குறைப்பதற்கு அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்வது இன்றியமையாததாகும்.

- அதிகமான வெளிநாட்டுச் செலாவணி நெகிழ்ச்சி மற்றும் ஒதுக்கு தாங்கிருப்புக்கள் என்பன வெளிவாரியான அதிர்வுகளுக்கெதிராக மீளெழுந்தன்மையை வலுப்படுத்தும்.

- இலங்கையில் மேலும் நிலைத்திருக்கக்கூடிய மற்றும் உள்ளடங்கலான வளர்ச்சிக்கான அடித்தளத்தையிடுவதற்கு நிறுவனங்களை வலுவூட்டுவதும் அமைப்பியல் சீர்திருத்தங்களை விரைவுபடுத்துவம் முக்கியமாகும்.

கொழும்பிலுள்ள அதிகாரிகளுடனும் வாசிங்டன் டீசியில் வசந்தகால குழுமங்களின்போதிலும் ஆக்கப்பூர்வமான கலந்துரையாடல்களுக்குப் பின்னர் இலங்கைக்கான பன்னாட்டு நாணய நிதியத்தின் தூதுக்குழுவிற்கான தலைவர் பின்வருமாறான அறிக்கையை வெளியிட்டார்:

"விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஒழுங்கினால் ஆதரவளக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்திற்குக் கீழான நான்காவது மீள்ாய்வு பற்றி இலங்கை அதிகாரிகளுடன் ஓர் அலுவலர் மட்டத்திலான உடன்படிக்கையை அடைந்துள்ளது. அதிகாரிகள் வெற்றிகரமாக இறைத் திரட்சியை முன்னெடுத்ததாலும் பன்னாட்டு ஒதுக்குகளை வலுபடுத்தியதனாலும் நிகழ்ச்சித்திட்டத்திற்குக் கீழான சகல திசெம்பர்-இறுதி அளவுசார்ந்த செயலாற்றப் பிரமாணங்களை பூர்த்திசெய்தது. உணவு விலைகளிலான வானிலை சார்ந்த அதிகரிப்பினால், திசெம்பரிற்கான உள் எல்லையின் மேல் எல்லையை பணவீக்கம் விஞ்சினாலும், அதன் பின்னர் உள் எல்லையிற்குள் மீண்டும் வீழ்ச்சியடைந்துள்ளது. சில காலதாமதங்கள் இருந்தபோதிலும், இந்த மீளாய்விற்கு

பூர்த்தியாகாத சகல அமைப்பியல் அடித்தள அளவு குறியீடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்கின்றனர்."

"வானிலை தொடர்புடைய அதிர்வுகளின் தொடரும் பாதிப்புக்களினால் 2017இல் காணப்பட்ட மிதமான வளர்ச்சிக்குப் பின்னர் வேளாண்மை மீளுயர தொடங்கி உணவு விலைகள் மிதமடைந்ததால் ஓர் மீட்சி தற்போது நடைபெறுகிறது. உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 2018 இல் 4 வீதத்தை அடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன் பணவீக்கம் 5 சதவீதத்திற்கு கீழாக தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்றுமதிகளும் தேறுவதுடன் அண்மையான பன்னாட்டிற்கான முறிகளின் வழங்கல் என்பது வெற்றிகரமாக மேலதிகமாக விற்பனைசெய்யப்பட்டது. இருப்பினும், தொடர்ந்தும் கணிசமாக காணப்படும் பொதுப் படுகடன், பாரிய மீள்நிதியிடல் தேவைப்பாடுகள் மற்றும் குறைந்த வெளிநாட்டுத்துறை தாங்கிருப்புக்களை கருத்திற்கொண்டால் எதிர்கணியமான அதிர்வுகளால் பொருளாதாரம் பாதிக்கப்படக்கூடிய நிலையில் தொடர்ந்துமுள்ளது."

"ஓர் தன்னியக்க எரிபொருள் விலையிடல் பொறிமுறையிற்கு அமைச்சரவையின் ஒப்புதலிற்குட்பட்டு விரிவாக்கப்பட்ட நிதி வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு இசைவாக, 2018 யூனில் நான்காவது மீளாய்வின் பூர்த்திக்கான இலங்கையின் வேண்டுகோளை சபை ஆலோசிக்கும். 2018இல் வலு விலையிடல் சீர்திருத்தங்களை பூர்த்திசெய்வதை நோக்கிய ஓர் பாரிய முன்னெடுப்பை இந்த வழிமுறை பிரதிபலிக்கும். அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் ஆளுகை மற்றும் இறை இடர்பாடுகளை மட்டுப்படுத்துவதற்கு மேலும் முயற்சிகள் தொடர்ந்தும் தேவைப்படுகின்றன. உள்நாட்டு அரசிறைச் சட்டம் மற்றும் 2018 வரவுசெலவுத்திட்டத்திலான ஏனைய அரசிறை வழிமுறைகளின் நடைமுறைபடுத்தலில் முன்னேற்றம் என்பது சமூகவியலான இலக்குகள் மற்றும் படுகடன் இயக்கவியலை மேம்படுத்துவதற்கு தொடர்ந்தும் இன்றியமையாததாகும். ஒதுக்குளை தொடர்ந்து கட்டியெழுப்புவது மற்றும் அதிகரித்த செலாவணி வீத நெகிழ்ச்சிக்கு ஆதரவளிக்கும் அதே வேளையில் பணவீக்கஞ் சார்ந்த அழுத்தங்களுக்கெதிராக பாதுகாப்பது தொடர்பாக மத்திய வங்கி தொடர்ந்தும் விழிப்புடன் இருக்கவேண்டும்."

"விரிவாக்கப்பட்ட நிதி வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்குக் கீழ், அதிர்வுகளுக்கெதிரான பொருளாதாரத்தின் மீளெளுந்தன்மையை வலுப்படுத்துவதற்கு உள்ளடங்கலான மற்றும் வலுவான வளர்ச்சியை விருத்திசெய்வதற்கு சீர்திருத்த இயங்குவிசையை நிலைத்திருக்கச்செய்வது இன்றியமையாததாகும். வலுவான இறை விதிமுறைகள் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் ஆளுகை; நாணய மற்றும் செலாவணி வீத கட்டமைப்புக்களின் நவீனமயப்படுத்தல் ; வர்த்தக சுதந்திரமயமாக்கல், வானிலை மற்றும் பால் ரீதியான வரவுசெலவுத்திட்டமிடல் மூலம் அவர்களுடைய உள்ளடங்கலான சீர்திருத்த நிகழ்ச்சி நிரலை விரைவுபடுத்துவது; மற்றம் மேலும் திறமையாக இலக்கிடப்பட்ட சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை மேலும் முன்னெடுத்துச் செல்வதனால் அதிகாரிகள் தங்களது தொலைநோக்கு 2025 குறிக்கோள்களை முன்னெடுத்துச்செல்லவேண்டும்."